நாள் 22.02.2023.

OS 37/2021 வாசா 3 தாமரைச்செல்வன் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி விவசாய வேலைக்கு ஆட்களை அனுப்பி வைப்பார் அந்த வகையில் அவர் எனக்கு பழக்கம். பிரதிவாதியை ஆர்டிஓ ஆபிசில் எனக்கு பழக்கம். ஞானசேகரனை எனக்கு முன்பே தெரியும். 6 வருடங்களாக அவரை எனக்கு தெரியும். கண்ணதாசனை 10 வருடங்களாக எனக்கு தெரியும். வாதி ஞானசேகர்வீட்டில் வைத்து பணம் கொடுத்தார். அப்போது வாதி, பிரதிவாதி, ஞானசேகரின் மனைவி உடன் இருந்தனர். ஞானசேகரின் மனைவியிடம் கையெழுத்து வாங்கவில்லை. ஞானசேகர் சொல்லசொல்ல புரோநோட்டில் நான் எழுதினேன். இதற்கு முன்பு புரோநோட்டு எதுவும் எழுதியதில்லை. இதற்கு முன்பு புரோ நோட் வழக்குகளில் நீதிமன்றத்தில் சாட்சியம் சொன்னதில்லை. அப்போது கடனுக்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தரவில்லை. புரோநோட்டு எழுதிய தேதிக்கு முதல்நாள் ஞானசேகரைப் பார்த்தேன். அவர் மறுநாள் என்னை வரசொன்னார். நான் போகும்போது வாதியும், பிரதிவாதியும் அங்கு இருந்தார்கள். எனக்கு பின்னர் சுந்தரேஷ்குமார் வந்தார். வாதியிடம் இருந்து பணத்தை வாங்கி சுந்தரேஷ்குமார் எண்ணினார். வீடு கட்டுவதற்காக பணம் வாங்குவதாக புரோநோட்டில் எழுதினேன். வாதியிடம் அந்த பணம் எங்கிருந்து சேகரிக்கப்பட்டது என்று நான் கேட்கவில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை குறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதி வாங்கிய பணத்தை கொடுக்கவில்லை என்ற விவரம் எனக்கு 6 மாதத்திற்கு முன்பு தெரியும். வாதி, பிரதிவாதிக்கிடையே நான் பஞ்சாயத்து பேச போகவில்லை. வழக்கு கடன் சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவோ விசாரணை செய்ததாகவோ எனக்கு தெரியாது. வாதி எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக புரோ நோட்டு எழுதியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் எந்த பணபரிவர்த்தனை நடக்கவில்லை என்றும் அதிகப்படியான தொகை எழுதி அதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும், பிரதிவாதியும்

என்னுடைய நண்பர் என்பதால் பிரதிவாதியின் கையெழுத்தை தெரிந்துகொண்டு வாதிக்கு ஆதரவாக மோசடியாக கடனுறுதி சீட்டு தயாரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) அ. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.